பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 11 2025 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வரிவசூல் மிகவும் முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க, மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மகளிரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

4. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 50 கோடியே 54 லட்சம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய குதிரையேற்ற சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ––

<<<<>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வரிவசூல் மிகவும் முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய வருவாய்ப் பணி பயிற்சி அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், சமூக நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு வரி வருவாய் இன்றியமையாதது என்று கூறினார்.

பொதுமக்களுக்கு பாதிப்பு அளிக்காமல் வரி வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

இந்திய பொருளாதாரத்தை பாதுகாப்பதில் வருவாய் அலுவலர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்று திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க, மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஹரியானாவின் குருஷேத்ராவில் சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூரின் **350-**ஆவது நினைவு நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், இளைஞர்கள் போதை பழக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்தார்.

ஸ்ரீ குரு தேக் பகதூரின் போதனைகள் மனித நேயத்திற்கு வழிகாட்டியாகவும், இந்திய கலாச்சாரத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஸ்ரீ குரு தேக் பகதூரின் சிறப்பு நினைவு நாணயத்தையும், அஞ்சல் தலையையும் பிரதமர் வெளியிட்டார்.

ஜோதிசரில் பகவான் கிருஷ்ணரின் பஞ்சான்ய சங்கின் பெயரில் அமைக்கப்பட்ட அரங்கத்தையும் பிரதமர் திறந்துவைத்தார்.

<<<<>>>>>

இந்தியா - சைப்ரஸ் இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சைப்ரஸ் நாட்டின், நாடாளுமன்ற அவைத் தலைவர் **Annita Demetriou,** தலைமையிலான நாடாளுமன்ற குழுவை சந்தித்து பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயணம் மிகவும் முக்கியமானது என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

முன்னதாக, இந்த குழுவினர், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினர்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சைப்ரஸ், ஐரோப்பிய யூனியன் தலைமை பொறுப்பை அடுத்த ஆண்டு ஏற்கவுள்ள நிலையில், இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையிலான உறவு மேலும் வலுப்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் மூலம், தொழிலார்களுக்கு சம ஊதியம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக பஞ்சாப், ஹரியானா, தில்லி வணிக தொழில் சங்கங்களின் கூட்டமைப்பின் துணைச் செயலர் திரு **Jatinder Singh** தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதன்மூலம், நாட்டின் வணிக நெறிமுறைகள் சீரமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும், வேலைவாய்ப்பில் வெளிப்படைத்தன்மை கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறிய அவர், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் சுமூகமாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மகளிரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் தொடர்பான விழிப்புணர்வு இயக்க நிகழ்ச்சியில் இன்று பேசிய அவர், நாட்டின் ஒவ்வொரு மகளிரின் பாதுகாப்பு, சமத்துவம், மரியாதையை பேணி காக்க வேண்டும் என்பதே இந்த விழிப்புணர்வு இயக்கத்தின் நோக்கம் என்று கூறினார்.

கிராமங்களிலிருந்து வன்முறையை அகற்றுவது கனவு மட்டுமின்றி, ஒவ்வொரு குடிமகனின் கடமை என்று திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

<<<<>>>>>

மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் திரு ஜுவல் ஓரம், திரிபுரா தலைநகர் அகர்தலாவில் இன்று மத்திய அரசின் திட்டங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

திரிபுரா சமூக நலத்துறை அமைச்சர் திரு டிங்கு ராய் உள்ளிட்டோருடன் அங்கு மேற்கொள்ளப்படும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>>

உலகம் தற்போது எதிர்கொண்டு வரும் இணைய சவால்களுக்கு தீர்வு காணும் விதமாக, இணைய பாதுகாப்பு கண்டுபிடிப்பு சவால் போட்டிக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தகவல் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த போட்டி நடத்தப்படுவதாக இத்துறையின் செயலாளர் திரு. கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், திறன் பயிற்சி பெற்ற வல்லுநர்களை உருவாக்குவதுடன், இணைய பாதுகாப்பு சார்ந்த வேலைவாய்ப்புகளுக்கும் வழிவகுக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 50 கோடியே 54 லட்சம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், கேரளா உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 99 புள்ளி ஒன்று ஆறு சதவீதம் வாக்காளர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளையடுத்து, அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>>

கோவாவில் நடைபெற்றுவரும் சர்வதேச திரைப்பட விழாவில், மறைந்த திரைப்பட நடிகர் தர்மேந்திராவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பேசிய இந்திய திரைப்பட இயக்குனர் **Raghul Rawail**, பிரபல இந்தி நடிகர் தர்மேந்திரா ஒரு சிறந்த மனிதர் என்று புகழாரம் சூட்டினார்.

**Mera Naam Joker, Betaab** உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் தர்மேந்திரா சிறப்பாக நடித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

தர்மேந்திராவின் திரைப்படங்களை உள்ளடக்கிய சிறப்பு காட்சிகள் இந்த சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.

<<<<>>>>>

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலுக்கு அந்நாட்டு அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் **Paktika, Khost, Kunar** மாகாணங்களில் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் ஒன்பது குழந்தைகள் உட்பட பத்து பேர் உயிரிழந்தனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆப்கானிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

எத்தியோப்பியாவில் எரிமலை வெடிப்பு மூலம் ஏற்பட்ட சாம்பல் புகை கிழக்கு திசை நோக்கி நகர்ந்த போதிலும், இதுகுறித்து கவலைகொள்ளத் தேவையில்லை என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சம் தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் இந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவை சேர்ந்த ஒரு சில விமானங்கள், மாற்று வான் பாதையில் இயக்கப்பட்டுள்ளதாகவும், பெரும்பாலான விமானங்களின் சேவைகளில் எந்த மாற்றமும் இல்லாமல் இயக்கப்படுவதாகவும் கூறியுள்ளது.

இதுதொடர்பான நிலைமையை சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் கண்காணித்து வருவதாகவும், பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மத்தியப்பிரதேச மாநிலம் **Khajuraho — Katni**-யில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி விளையாட்டுப் போட்டிகளை இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கேலோ இந்தியா, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம், இளைஞர்கள் எதிர்கால விளையாட்டு வீரர்களாக மாற்ற வழிவகை செய்துள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>>

ஆசிய குதிரையேற்ற சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **Dressage** குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

------------

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் — அர்ஜுன் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-11, 21-13,** என்ற செட் கணக்கில், **Makhija — Sujey Tamboli** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Treesa Jolly — Gayatri Gopichand** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிகெட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 27 ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 260 ரன் எடுத்திருந்த நிலையில் டிக்ளர் செய்தது.

இந்தியா வெற்றிபெற 549 ரன் என்ற இலக்கை தென்னாப்பிரிக்கா நிர்ணயித்துள்ளது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 489 ரன்னும், இந்தியா 201 ரன்னும் எடுத்துள்ளன.

**<<<<END>>>>>**